கோர்ட்டுகள்" அமைக்க வேண்டுமா என்பது போன்ற பிரச்சினைக்குரிய விஷயங்களைப் பரிசீலித்து முடிவெடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். சாதாரண ஏழை எளிய மக்களுடைய வழக்குகளைத் தீர்ப்பதற்காக அவர்கள் பல நூறு மைல்களுக்கு வந்து போகும் நிலையை மாற்றி, ஏழை எளிய சாதாரண மக்களுக்குப் பலனளிக்கும் வகையில் மதுரையில், உயர்நீதி மன்றத்தின் ஒரு பகுதியை (பெஞ்ச்) அமைக்க வேண்டுமென்ற இந்தக் கருத்தை இந்த அரசு ஏற்று, மத்திய அரசுக்குத் தெரிவித்து, தொடர்ந்து இக்கோரிக்கையை வற்புறுத்தியும் வருகின்ற காரணத்தால், இந்தத் தனி உறுப்பினர் தீர்மானத்தை மேற்கொண்டு வற்புறுத்தாமல் இத்துடன் விட்டு விடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் தமது தீர்மானத்தை வற்புறுத்துகிறாரா?

திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விரிவான விளக்கத்திற்குப்பின், என்னுடைய தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொள் கிறேன்.

தீர்மானம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

4. தலைமை ஆசிரியர் பதவிகளை அரசிதழ் பதிவு பெற்ற பதவிகளாக ஆக்குதல்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: தலைமை ஆசிரியர் பதவி குறித்து தனி உறுப்பினர் தீர்மானம் கொடுத்திருக்கும் திரு. சங்கரலிங்கம் அவையில் இல்லாததால், தீர்மானம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை பிற்பகல் 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6.44)

5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

238. Notification issued with G.O. Ms. No. 526, Commercial Taxes and Religious Endowments, dated 31st October 1974 in regard to exemption of sale of machinery, hospital equipments,